# தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமம்

## TAMIL NADU FOREST UNIFORMED SERVICES RECRUITMENT COMMITTEE

**8வது கீழ் தளம், எண்.01 ஜீனிஸ் சாலை, பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை-600 015.**

**8th Down Floor, No.01, Jeenis Road, Panagal Maaligai, Saidapet, Chennai - 600 015.**

**Phone No. / தொலைபேசி எண். 044-2434 1251**

**Website : www.forests.tn.gov.in** **Email Id : tnfusrc.tnchn@nic.in**

**வனக்காப்பாளர் மற்றும் ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்புதல்**
**(விளம்பர எண்.2/2019, நாள்:30.11.2019)**

***

**விண்ணப்பதாரர்களின் சிறப்பு கவனத்திற்கு**

தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமத்தால் கடந்த ஆண்டுகளில் நடத்தப்பட்ட தேர்வுகளில் கீழ்காணும் பிரிவுகளில் அநேக விண்ணப்பதாரர்களால் முறையான/சரியான/தகுதியான விபரங்களை மற்றும் ஆவணங்களை அளிக்காததால் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனவே, விண்ணப்பதாரர்கள் இத்தகைய நிலையினை தவிர்க்கும் பொருட்டு கீழ்காணும் அறிவுரைகளை கவனமாக பின்பற்றி கீழ்காண் பிரிவுகளில் முழுமையான விபரங்களை/ஆவணங்களை அளிக்க விண்ணப்பதாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்த அறிவுரைகளின்படி முழுமையான விபரங்களை/ஆவணங்களை அளிக்காத பட்சத்தில் சான்றிதழ் சரிபார்த்தலின்போது விண்ணப்பதாரர்களின் முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

### 1. தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு ஒதுக்கீடு:–

தகவல் சிற்றேடு பத்தி எண்.6.5–ல் குறிப்பில் இனம் எண். 6 மற்றும் 7ல் வழங்கியுள்ள அறிவுரைகளின்படி அறிவிக்கை செய்யப்பட்ட நாளிற்குமுன் கடந்த ஐந்தாண்டுகளுக்குள் எட்டிய உயர்நிலை சாதனையின்படி தகுதிகளை பரிசீலனை செய்து அதற்கேற்ப மதிப்பெண் வழங்கப்படும். இந்திய ஒலிம்பிக் சங்கம் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட கழகங்களால் வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்கள் மட்டுமே இந்த ஒதுக்கீட்டிற்கு பரிசீலிக்கப்படும்.

### 2. தமிழ்வழிக் கல்வி பயின்றோர்க்கான இட ஒதுக்கீடு (PSTM):–

தகவல் சிற்றேடு பத்தி எண்.6.6–ல் வழங்கியுள்ள அறிவுரைகளின்படி இத்தேர்வில் கலந்துகொள்ளும் விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியினைத் தமிழ் வழியில் படித்துத் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பிக்க விரும்பும் பதவிக்கு நிர்ணமிக்கப்பட்ட கல்வித் தகுதியினை தமிழ் பயிற்று மொழியில் (Tamil Medium) பயின்றுள்ளார் என்ற விவரம் விண்ணப்பதாரரின் மதிப்பெண் / மாற்றுச் சான்றிதழில் இல்லாதிருந்தால், அவர் பயின்ற கல்வி நிலையத்திலிருந்து தமிழ் பயிற்று மொழியில் படித்துள்ளார் என்பதற்கான சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். போதிய தமிழ் அறிவு பெற்றிருப்பதாகக் கோரும் விண்ணப்பதாரர் அவருடைய தாய்மொழி தமிழாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், அவர் பள்ளியிறுதி பொதுத்தேர்வில் தமிழை ஒரு மொழியாக எடுத்து படித்திருந்தாலோ அல்லது மொழி அல்லாத மற்ற எல்லா பாடங்களையும் தமிழில் படித்திருந்தாலோ அல்லது இரண்டாம் வகுப்பு மொழித்தேர்வில் (முழுத்தேர்வு) தமிழில் தேர்ச்சி பெற்றிருந்தாலோ அதன் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

**3. ஆதரவற்ற விதவைகளுக்கான இடஒதுக்கீடு (வனக்காப்பாளர், ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் மற்றும் வனக்காவலர் பணியிடத்திற்கு மட்டும்) :—**

தகவல் சிற்றேடு பத்தி எண்.6.2—ல் வழங்கியுள்ள அறிவுரைகளின்படி ஆதரவற்ற விதவைக்கான சான்றினை உரிய படிவத்தில் வருவாய்க் கோட்டாட்சியர்/ சார் ஆட்சியர்/ உதவி ஆட்சியர் ஆகியோரிடம் மட்டுமே பெற்றிருக்க வேண்டும். வெறுமனே விதவைக்கான சான்றிதழை மேற்குறிப்பிட்ட அலுவலர்களை தவிர்த்து இதர அலுவலர்களிடமிருந்து பெற்றிருந்தால் அச்சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கடந்த ஆண்டுகளில் நடத்தப்பட்ட தேர்வுகளில் அநேக விண்ணப்பதாரர்களால் முறையான/சரியான/தகுதியான சான்றிதழை அளிக்காததால் அத்தகைய விண்ணப்பங்கள் சான்றிதழ் சரிபார்த்தலின்போது நிராகரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என சுட்டிக்காட்டப்படுகிறது.

**4. ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பதவிக்குரிய முதலுதவிச் சான்றிதழ் அளித்தல்:—**

தகவல் சிற்றேடு பத்தி எண்.11 (எ)—ல் வழங்கியுள்ள அறிவுரைகளின்படி தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட முதலுதவிச் சான்றிதழினை இணையதளம் வழியாக விண்ணப்பிக்கும் நாளின்போதும் மற்றும் சான்றிதழ் சரிபார்க்கும் நாளின்போதும் செல்லத்தக்கதாக உள்ள தகுதியான முதலுதவிச் சான்றிதழினை பெற்றிருத்தல் வேண்டும். மேலும் சென்றமுறை நடைபெற்ற ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பதவிக்குரிய தேர்வின்போது தகுதியான முதலுதவிச் சான்றிதழ் அளிக்கப்படாத காரணத்தால் பல விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

**5. சாதிச்சான்றிதழ் :—**

தகவல் சிற்றேடு பத்தி எண்.11 (உ)—ல் வழங்கியுள்ள அறிவுரைகளின்படி விண்ணப்பதாரர்கள் சாதிச்சான்றிதழை உரிய அலுவலரிடமிருந்து பெற்று அவ்விபரத்தை அதற்கு உரிய இனங்களில் சரியாக பதிவு செய்ய வேண்டும். இதர நபர்கள் பொது வகுப்பினர் என்று விண்ணப்பிக்க வேண்டும். வகுப்பு விபரம் பதிவு செய்வதில் தவறேதும் ஏற்படும் பட்சத்தில் அதனை மாற்றம் செய்ய இயலாது என்பதோடு அதுபோன்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

**6. முன்னாள் இராணுவத்தினர் (வனக்காப்பாளர், ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் மற்றும் வனக்காவலர் பணியிடங்களுக்கு மட்டும்) :—**

தகவல் சிற்றேடு பத்தி எண்.6.4 —ல் வழங்கியுள்ள அறிவுரைகளின்படி இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையில் ஏதாவது ஒன்றில் பணியாற்றி, பணியில் இருந்து விடுவிக்கப்பட்டவர்கள் இத்தேர்வில் கலந்துகொள்ள தகுதி பெற்றவர்கள் ஆவர். இதர பிரிவில் பணியாற்றி பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் இத்தேர்வில் கலந்துகொள்ள தகுதி அற்றவர்கள். தவறாக விண்ணப்பிக்கும் நபர்கள் சான்றிதழ் சரிபார்த்தலின்போது தகுதிநீக்கம் செய்யப்படுவார்கள்.

**7. உடற்தகுதி :—**

விளம்பர எண்.2/2019—ன் மூலம் வெளியிடப்பட்ட அறிவிக்கை பத்தி எண்.10—ல் வழங்கியுள்ள அறிவுரைகளின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள உடற்தகுதி அளவு பெற்றவர்கள் மட்டுமே இத்தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்கும்போது தாங்கள் பெற்றுள்ள உடற்தகுதி விபரங்களை மிகச்சரியாக உள்ளீடு செய்தல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்டுள்ள உடற்தகுதி பெறாதவர்கள் உடற்தகுதி சரிபார்த்தலின்போது தகுதிநீக்கம் செய்யப்படுவார்கள்.

**நாள்: 24.01.2020** **தலைவர், த.நா.வ.சீ.ப.தே.கு.**